மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன

இணை இயக்குநரின் (பயிற்சி) செயல்முறைகள், சென்னை-06.

ந.க.எண்.1068093 /எஃப்-4/2024 நாள். 16 .12.2024.

---------

பொருள்: மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் மூலம் உள்ளடக்கிய கல்வி இ-பயிற்சியினை 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு Baseline & Endline Assessment மூலமாக மதிப்பீடு செய்து அதனை LMS தளம் வாயிலாக பதிவேற்றம் மேற்கொண்டும் இணையவழியில் பயிற்சியானது மாவட்டங்களில் 14.12.2024 அன்று காணொலி மூலம் அளிக்கப்பட்டது – பயிற்சி சார்ந்த தற்போதைய முன்னேற்ற அறிக்கை விவரம் தெரிவிக்க கோருதல் – தொடர்பாக.

பார்வை :

1. தமிழ்நாடு மாநிலத்திட்ட இயக்குநர் மற்றும் பள்ளிக் கல்வி இயக்குநரின் இணை செயல்முறைகள் கடித ந.க.எண். 170/ ஆ3/1E/ஒபக/2024 நாள்03.12.2024.
2. இந்நிறுவன இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.1068093/எஃப்-4/2024 நாள்.05.12.2024.

.......

பார்வையில் காணும் வழிகாட்டுதல் மற்றும் நெறிமுறைகளின்படி, 2024 – 2025 ஆம் கல்வியாண்டில் சிறப்பு தேவையுடைய குழந்தைகளுக்கான உள்ளடக்கிய கல்வியின் மூலம் முறையான கல்வியை மேம்படுத்தும் நோக்கில் கட்டகம் உருவாக்கப்பட்டும், அதனை மதிப்பீடு செய்தும் (Assessment) உள்ளடக்கிய கல்வி பற்றி ஆசிரியர்கள் அறிந்திடும் வகையில் LMS தளத்தின் மூலம் பதிவேற்றம் மேற்கொள்ளப்பட்டு, இணைய வழி வாயிலாக EMIS தளத்தின் வழியே 14.12.2024 அன்று அனைத்து மாவட்டங்களில் ஆசிரியர்கள் பயன்பெறும் வகையில் காணொலி மூலம் இ-பயிற்சி அளிக்கப்பட்டது.

எனவே, மாநிலம் முழுவதும் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை கையாளும் அனைத்து வகை பள்ளி ஆசிரியர்களுக்கு LMS வழியாக பயிற்சி அளிக்கப்பட்டுள்ள நிலையில், பயிற்சி சார்ந்து தற்போதைய முன்னேற்ற அறிக்கை விவரத்தினை இந்நிறுவன tnscertjd3@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்கள் மற்றும் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

16/12

இணை இயக்குநர் (பயிற்சி)

16/12/24

பெறுநர்

1. அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்கள்
2. முதல்வர்கள், அனைத்து மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்.